


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.11.2025) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 11.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சிவ இளங்கோ சாலையில் தரை மற்றும் நான்கு தளங்களுடன் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் காவல் துணை ஆணையாளர் அலுவலகம் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், வெற்றியழகன், தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.11.2025) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கொளத்தூர், ஜெகந்நாதன் தெருவில், 11 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அடித்தளம் மற்றும் நான்கு தளங்களுடன் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு மற்றும் மறுவாழ்வு மையக் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ. பரந்தாமன், வெற்றியழகன், தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, முதன்மைச் செயலாளர்கோ.பிரகாஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### பெரியமேடு சார் பதிவாளர் அலுவலகத்துக்கான புதிய கட்டடம் – ரூ.5.24 கோடியில் புதுப்பிக்கப்பட்ட

# கொளத்தூரில் பெரியார் நகர் நூலகம் - முதல்வர் படைப்பகம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, நவ.15-**

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.5.24 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்ட பெரியார் நகர் நூலகம் மற்றும் முதல்வர் படைப்பகம், ரூ. 3.86 கோடி செலவில் பெரியமேடு சார்பதிவாளர் அலுவலகத்திற்கான புதிய கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்து, பெரியார் அரசு மருத்துவமனை வளாகத்திற்குள் ரூ.68 இலட்சம் மதிப்பீட்டில் K5 - பெரவள்ளூர் புற காவல் நிலையம் கட்டும் பணிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.11.2025) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கொளத்தூர், பெரியார் நகரில் 5.24 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்ட பெரியார் நகர் நூலகம் மற்றும் முதல்வர் படைப்பகம், 3.86 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பெரியமேடு சார்பதிவாளர் அலுவலகத்திற்கான புதிய கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்து, பெரியார் அரசு மருத்துவமனை வளாகத்திற்குள் 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக K5 - பெரவள்ளூர் புற காவல் நிலையம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், கொளத்தூர் காவல் துணை ஆணையாளர் அலுவலகம் மற்றும் ஜெகநாதன் தெருவில் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையத்தின் கட்டுமானப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**முதல்வர் படைப்பகம்**

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில், தமிழ்நாட்டில் முதன்முதலாக கொளத்தூர் ஜெகந்நாதன் தெருவில் கடந்த 4.11.2024 அன்று தொடங்கப்பட்ட 'முதல்வர் படைப்பகம்' தற்போது ஓராண்டை கடந்து வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. இப்படைப்பகம் போட்டித் தேர்விற்கு படிக்கும் மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

மேலும், முதல்வர் படைப்பகத்தின் ஒரு அங்கமான பகிர்ந்த பணியிட மையத்தின் வாயிலாக இதுவரை 4,489 புத்தொழில் முனைவோர்கள், தங்களின் நிலையான வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளனர். இதில் பெரும்பாலானோர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய பகிர்ந்த பணியிட மையத்தில் உள்ள

3 ஆலோசனை கூடங்களில் 2,052 கருத்தரங்கங்கள் நடைபெற்று,

தொழில் முனைவோர்கள் பலதரப்பட்ட வாடிக்கையாளர்களுடன் கலந்தாலோசனைகள் நடத்தி பயனடைந்துள்ளனர்.

மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடம் முதல்வர் படைப்பகம் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளதை கருத்தில்கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்னையில் பல்வேறு இடங்களில் முதல்வர் படைப்பகங்கள் அமைக்க உத்தரவு பிறப்பித்துள்ளார். அதனைத் தொடர்ந்து, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில், **"30 முதல்வர் படைப்பகங்கள்" அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அண்மையில், தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் சென்னை தங்க சாலையில் ஒரு முதல்வர் படைப்பகம் திறந்து வைத்தார். மேலும் 27 "முதல்வர் படைப்பகங்கள்" விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில், பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

**புதுப்பிக்கப்பட்ட பெரியார் நகர் நூலகம் மற்றும் முதல்வர் படைப்பகத்தை திறந்து வைத்தல்**

அதன் ஒரு பகுதியாக, கொளத்தூர், பெரியார் நகர் நூலகம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 5.24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு, முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகமாக **தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களால் இன்றையதினம் மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

இப்புதுப்பிக்கப்பட்ட முதல்வர் படைப்பகம், தரைத்தளம் மற்றும் முதல் தளத்தைக் கொண்ட குளிரூட்டப்பட்ட நவீன படைப்பகமாக அமைக்கப்பட்டுள்ளது. தரைத்தளத்தில் 75 இருக்கைகளுடன் கூடிய நூலகம், முதல் தளத்தில் 85 இருக்கைகள் கொண்ட கற்றல் மையம் மற்றும் 60 இருக்கைகள் கொண்ட பயிற்சிக் கூடம் ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், 70,000 புத்தகங்களுடன் கூடிய நூலக வசதி, மின்வழி கற்றல் (E-Learning), இலவச இணையதள இணைப்பு, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், சிற்றுண்டியகம், கழிப்பறைகள் உள்ளிட்ட அனைத்து நவீன வசதிகளும், மாணவர்கள், போட்டித் தேர்வு ஆர்வலர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் சிறப்பாக உருவாக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, மேலும் மாணவச் செல்வங்கள் பயன்பெறும் வகையில், போட்டித் தேர்வுகளுக்கான வழிகாட்டல் மற்றும் தீவிரப் பயிற்சிகளை வழங்குவதற்கு, தமிழ்நாடு அரசின் சார்பில் இயங்கிவரும், அகில இந்திய குடிமைப் பணி பயிற்சி மையமும் இணைந்து, இளைஞர்களுக்கு திசைகாட்டும் மாபெரும் திட்டமான "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ், இந்திய குடிமைப் பணி தேர்வுகள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தேர்வுகளுக்கு சிறந்த பயிற்றுநர்கள் மூலமாக சிறப்பான பயிற்சி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**பெரியமேடு சார்பதிவாளர் அலுவலகத்திற்கான புதிய கட்டடத்தை திறந்து வைத்தல்**

2023-2024 ஆண்டு வணிகவரி மற்றும் பதிவுத்துறை மானியக் கோரிக்கையில், மிகவும் பழமை வாய்ந்த சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க, சென்னை–எழும்பூர், சிந்தாதிரிப்பேட்டை மற்றும் வேப்பேரி உள்ளிட்ட 4.86 சதுர கிலோமீட்டர் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு பத்திர பதிவு சேவைகள் வழங்கி வரும் பெரியமேடு சார் பதிவாளர் அலுவலகத்திற்கு 3.86 கோடி ரூபாய் செலவில் 6,200 சதுரஅடி நிலப்பரப்பில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் கட்டப்பட்டுள்ள பெரியமேடு சார்பதிவாளர் அலுவலகத்திற்கான புதிய கட்டடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்.

இப்புதிய கட்டடம், மொத்தம் 7,323 சதுர அடி கட்டட பரப்பளவில், வாகன நிறுத்துமிடம், பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கழிவறை, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், மின் தூக்கி, குளிர்சாதன அறைகள், இணைய சேவை, சிறு நூலகம், மாற்றுத்திறனாளிகளுக்கான கழிப்பறை உள்ளிட்ட நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

**பெரவள்ளூர் புற காவல் நிலையம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்**

பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் கொளத்தூர், கார்த்திகேயன் சாலையில் உள்ள பெரியார் அரசு மருத்துவமனை வளாகத்திற்குள் 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக K5 - பெரவள்ளூர் புற காவல் நிலையம் கட்டும் பணிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்.

**காவல் துணை ஆணையர் அலுவலகம், இரத்த சுத்திகரிப்பு மற்றும் மறுவாழ்வு மையம் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தல்**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 11.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சிவ இளங்கோ சாலையில் 29,514 சதுர அடி கட்டட பரப்பளவில் தரை மற்றும் நான்கு தளங்களுடன் கொளத்தூர் காவல் துணை ஆணையாளர் அலுவலகம் கட்டும் பணிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 5.8.2025 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. இப்புதிய அலுவலகக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கொளத்தூர், ஜெகந்நாதன் தெருவில், 11 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அடித்தளம் மற்றும் நான்கு தளங்களுடன் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு மற்றும் மறுவாழ்வு மையக் கட்டுமானப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த நிகழ்ச்சியில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ. பரந்தாமன், வெற்றியழகன், தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ரங்கநாதன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ், நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநரும் கொளத்தூர் மண்டல கண்காணிப்பு அலுவலருமான பா.கணேசன் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், கொளத்தூர் காவல் துணை ஆணையாளர் பொ. குமார், அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம் (சென்னை) முதல்வர் முனைவர் டி.எஸ்.சரவணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில்

# ரூ.1.16 கோடி செலவில் கட்டப்பட்ட புதிய கட்டடம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, நவ. 15–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் நேற்று (14.11.2025) வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் ரூ.1.16 கோடி செலவில் கட்டப்பட்ட சமய அரங்கம், திருக்கோயிலில் சேவைகள் முன்பதிவு மையம், கட்டணமில்லா காலணி பாதுகாப்பகம் மற்றும் பொருட்கள் பாதுகாப்பகம் ஆகியவற்றை திறந்து வைத்தார். மேலும், 2025 – 26 ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பின்படி, வடபழனி ஆண்டவர் திருக்கோயில் சார்பில் ஓதுவார் பயிற்சிப் பள்ளியினை தொடங்கி வைத்து, 3 ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்து சமய அறநிலையத்துறையானது தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்குகள் நடத்துதல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பணிகளோடு, அறப்பணிகளாக திருக்கோயில்கள் சார்பில் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பயிற்சி நிறுவனங்கள், கருணை இல்லங்கள், மூத்த குடிமக்கள் உறைவிடங்கள், மருத்துவ மையங்கள் போன்றவற்றையும் நடத்தி வருகிறது.

**ரூ.1.16 கோடி செலவில் கட்டப்பட்ட புதிய கட்டடத்தை திறந்து வைத்தல் :**

வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் பக்தர்களுக்கான வசதிகளை மேம்படுத்திடும் வகையில் ரூ.1.16 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இதில் பக்தர்கள் செய்ய விரும்பும் அபிஷேகம், சங்காபிஷேகம், சந்தனகாப்பு அபிஷேகம், துலாபாரம் செலுத்துதல், தங்கரதம் இழுத்தல், அன்னதானத்திற்கு நன்கொடை வழங்குதல், இதர காணிக்கைகளை செலுத்துதல் ஆகியவற்றிகு முன்பதிவு செய்திடும் வகையில் திருக்கோயில் சேவைகள் முன்பதிவு மையமும், திருக்கோயில் சார்ந்த நிகழ்ச்சிகளை நடத்திடும் வகையில் சமய அரங்கமும், பக்தர்களின் காலணிகள் மற்றும் பொருட்களை பாதுகாத்திடும் வகையில் கட்டணமில்லா காலணி மற்றும் பொருட்கள் பாதுகாப்பகம் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டடத்தை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்.

**ஓதுவார் பயிற்சிப் பள்ளியை தொடங்கி வைத்தல் :**

இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்கள் சார்பில் 6 அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள், 4 ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள், 3 தவில் மற்றும் நாதஸ்வர பயிற்சிப் பள்ளிகள், 2 வேத ஆகம பாடசாலைகள், ஒரு திவ்ய பிரபந்த பாடசாலை என 16 பயிற்சிப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உணவு, உடை, உறைவிடத்துடன் மாதந்தோறும் ஊக்கத்தொகையாக முழுநேரமாக பயிலும் மாணவர்களுக்கு ரூ.10,000/–மும், பகுதிநேரமாக பயிலும் மாணவர்களுக்கு ரூ.5,000/–மும் வழங்கப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலை, அருணாசலேசுவரர் திருக்கோயில், பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், சமயபுரம், மாரியம்மன் திருக்கோயில், மதுரை, மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் ஆகிய 4 திருக்கோயில்கள் சார்பில் ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள் ஏற்கனவே நடத்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் 45 மாணவர்கள் முழுநேரமாகவும், 17 மாணவர்கள் பகுதிநேரமாகவும் பயிற்சிப் பெற்று வருகின்றனர்.

2025 – 26 ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் வடபழனி, ஆண்டவர் திருக்கோயில் சார்பில் புதிய ஓதுவார் பயிற்சிப் பள்ளி தொடங்கப்பட்டுள்ளது. பகுதி நேரமாக செயல்படும் இப்பள்ளியில் 25 மாணவர்கள் சேர்ந்துள்ளனர். இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் ஓதுவார் பயிற்சிப் பள்ளியினை இன்று தொடங்கி வைத்து, அப்பள்ளிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள தேவார ஆசிரியர், இசை ஆசிரியர் மற்றும் தமிழாசிரியர் ஆகிய 3 ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கலை மற்றும் பண்பாட்டுத்துறை இயக்குநர் திருமதி எஸ்.வளர்மதி, கூடுதல் ஆணையர் சி. ஹரிப்ரியா, திருக்கோயில் தக்கார் ல.ஆதிமூலம், இணை ஆணையர் சு. மோகனசுந்தரம், திருக்கோயில் துணை ஆணையர் / செயல் அலுவலர் இரா. ஹரிஹரன், உதவி ஆணையர் பாஸ்கர், மாநகராட்சி மன்ற உறுப்பினர் எஸ். பாஸ்கர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஆலந்தூர் தொகுதியில் பொதுமக்களுக்கு சம்ப் அமைந்து குடிநீர் வழங்குவதற்கு ரூ.26 கோடி மதிப்பிலான திட்டப்பணிகளை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன், ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தே மாதரம், ஒன்றியக் குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், துணைத் தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம் மற்றும் கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் உள்ளனர்.